## உதவி அமர்வு நீதிபதி மற்றும் தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தென்காசி.

முன்னிலை :– திருமதி.J.கிறிஸ்டல் பபிதா எம்.எஸ்.சி., எம்.எல்.,
உதவி அமர்வு நீதிபதி மற்றும்
தலைமை நீதித்துறை நடுவர், தென்காசி.

2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 11 ஆம் நாள் புதன் கிழமை

**S.C.No. 259/ 2022**

C.N.R.No.TNTS02-006269-2025

(தென்காசி, குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தின்
முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண். 21 /2019)
(தென்காசி காவல் நிலைய குற்ற எண். 483/ 2017)

| | | |
|---|---|---|
| அரசுக்காக :<br>காவல் ஆய்வாளர்,<br>தென்காசி காவல் நிலையம். | : | ... குற்ற முறையிடுபவர் |
| | : | எதிரிகள்:–<br>1) பால்தினகரன்,<br>த.பெ. வனராஜ்,<br>முப்பிடாதி அம்மன்கோவில் தெரு,<br>ஊர்மேழகியன்.<br>2) வசந்தகுமார்,<br>த.பெ. சந்திரன் (எ) சோழமுத்து,<br>தெற்கு புதுார் தெரு,<br>கல்லிடைகுறிச்சி.<br>3) மகேந்திரன்,<br>த.பெ. ராஜா,<br>இந்திரா காலனி,<br>அயன்சிங்கம்பட்டி.<br>4) ராஜேஸ்கண்ணன்,<br>த.பெ. மாடசாமி,<br>தெற்கு புதுதெரு,<br>கல்லிடைகுறிச்சி.<br>5) சேகர்,<br>த.பெ. சண்முகவேல்,<br>இலஞ்சி. |

| | | |
|---|---|---|
| | | 6) ராஜா,<br>த.பெ. சக்திவேல் பாண்டியன்,<br>இலஞ்சி. |
| அரசுதரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் | | எதிரிகள் மீது இதச பிரிவு 399 – ன்படி குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. |
| நீதிமன்றம் எதிரிகள் மீது வனைந்த குற்றச்சாட்டு | | எதிரிகள் மீது இதச பிரிவு 399 – ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது. |
| எதிரிகளின் கூற்று | | குற்றவாளிகள் இல்லை. |
| நீதிபதியின் நிர்ணயம் | | எதிரிகள் இதச பிரிவு 399 – ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானிக்கப்படுகிறது. |
| தீர்ப்பு :– | : | முடிவாக, எதிரிகள் மீதான இதச பிரிவு399 –ன் படியான குற்றச்சாட்டு அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என்றும் முடிவு செய்து எதிரிகளை இதச பிரிவு 399–ன் படியான குற்றத்திலிருந்து குற்றவியல் விசாரணை முறைச் சட்டம் பிரிவு 235(i)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் எதிரிகள் விசாரணை காலத்தில் பிணையில் இருந்து வந்துள்ள நிலையில், மேல் முறையீட்டு காலத்திற்கு பின் எதிரிகளின் பிணை பத்திரம் ரத்து செய்திட உத்தரவிடப்படுகிறது.<br>முடிவாக, எதிரிகள் மீதான இதச பிரிவு 399 –ன் படியான குற்றச்சாட்டு அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே எதிரிகள் குற்றவாளிகள் |

| | | |
|---|---|---|
| | | அல்ல என்றும் முடிவு செய்து எதிரிகளை இதச பிரிவு 399–ன் படியான குற்றத்திலிருந்து குற்றவியல் விசாரணை முறைச் சட்டம் பிரிவு 235(i)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் எதிரிகள் விசாரணை காலத்தில் பிணையில் இருந்து வந்துள்ள நிலையில், மேல் முறையீட்டு காலத்திற்கு பின் எதிரிகளின் பிணை பத்திரம் ரத்து செய்திட உத்தரவிடப்படுகிறது.<br>இவ்வழக்கில் பிஆர் எண் 29/2026 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு, சாபொ–3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள அருவாள் ஒன்று. சாபொ–4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள வெள்ளை கருப்பு கலரில் உள்ள மங்கிகுல்லா ஒன்று, பிரவுன் கலரில் உள்ள மங்கிகுல்லா ஒன்று. சாபொ–5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள சக்தி மிளகாய் துாள் பாக்கெட் ஒன்று, ஆச்சி மிளகாய் துாள் பாக்கெட் ஒன்று. சாபொ–6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள வெளிரிய நிலையில் சந்தன கலரில் உள்ள இடது வலது கைகளில் போடக்கூடிய (இரப்பர்) உறைகள் இரண்டு ஜோடி. சாபொ–7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள சிறிய இரும்பு பாறைக்கம்பி ஒன்று. சாபொ–8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள சிறிய ஆணி பிடுங்கும் கம்பி ஒன்று ஆகியவை பயனற்ற பொருள்கள் என்பதினால் மேல்முறையீட்டு காலத்திற்குப் பின் |

| | | |
|---|---|---|
| | | அழிக்குமாறும், சாபொ–1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள TN 76 M 8325 என்ற பதிவு எண் கொண்ட ஹீரோ ஹோண்டா பேசன் புரோ பைக் ஒன்று தென்காசி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தின் சிஆர்எம்பி எண் 8053/2017 12.12.2017 தேதியிட்ட உத்தரவுபடி மனுதாரர் வள்ளிபிரபாகரன் என்பவர் வசம் இடைக்காலப் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளதை அவரே தொடர்ந்து வைத்துக் கொள்ளவும், பிணைமுறி ரத்து செய்யப்பட வேண்டுமென்றும், மேல் முறையீடு இருப்பின் மேல் முறையீட்டு உத்தரவுப்படி செயல்பட வேண்டு மென்றும் உத்தரவிடப்படுகிறது. சாபொ–2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள TN 76 TN AC 2849 என்ற பதிவு எண் கொண்ட கருப்பு கலர் ஹீரோ ஹோண்டா பைக் ஒன்று கொடைக்கானால் காவல் நிலைய குற்ற எண் 369/2017, u/s. 379 IPC வழக்கு சம்மந்தப்பட்டது என்பதினால் கொடைக்கானால் காவல் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனவே அதனை பொறுத்து எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை. |

இந்த வழக்கானது தென்காசி, கற்றறிந்த நீதித்துறை நடுவர் அவர்களால் 09.04.2019 அன்று முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண் 21/2019 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அதன்பிறகு இவ்வழக்கு மேல் விசாரணைக்காக திருநெல்வேலி முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி

வைக்கப்பட்டு, அங்கு இந்த வழக்கானது **அமர்வு வழக்கு எண்.259/2022** ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அங்கிருந்து இவ்வழக்கானது தென்காசி கூடுதல் உதவி அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு அங்கு 31.10.2022 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர் தென்காசி மாவட்ட அமர்வு நீதிமன்ற A.No.218/2025 12.09.2025 தேதியிட்ட உத்தரவுப்படி இந்நீதிமன்றத்திற்கு வரப்பெற்று 08.10.2025 அன்று இந்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, இதுநாள் வரையில் பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கு **10.03.2026** அன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது, குற்றமுறையிடுபவர் தரப்பில் கூடுதல் அரசு குற்றத்துறை வழக்குரைஞர் திரு.R. சுரேஷ் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிரி தரப்பில் சட்ட உதவி வழக்கறிஞர் திரு. வேல்பாண்டி அவர்களும், 2ம் எதிரி தரப்பில் வழக்கறிஞர் C. அம்சிகா அவர்களும், 3ம் எதிரி தரப்பில் சட்ட உதவி வழக்கறிஞர் திரு. முத்துகுமார் அவர்களும், 5ம் எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. சண்முக ராமர் அவர்களும், ஆஜராகியும் இருதரப்பு வாதங்களைக் கேட்டும், இவ்வழக்கு சம்மந்தப்பட்ட ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரான ஆய்வில் இருந்து வந்த இந்த வழக்கில் இன்று (11.03.2026) இந்நீதிமன்றம் வழங்கும்....

## தீர்ப்புரை

1. அரசுத்தரப்பில், கடந்த 08.10.2017 ம் தேதி அதிகாலை 02.45 மணிக்கு காவல் உதவி ஆய்வாளர் சேகனா மற்றும் போலீஸ் பார்ட்டி சகிதம் தென்காசி பகுதியில் குற்றங்கள் ஏதும் நடவாமல் கண்காணித்து வரும்போது தென்காசி – ஆய்குடி செல்லும் ரோட்டிலுள்ள ரயில்வே கேட்டுக்கு கிழக்கே சுமார் 100 அடி துாரத்தில் கீழ்பக்கமுள்ள பாழடைந்த கட்டிடத்திற்குள் 1 முதல் 6 எதிரிகள் சேர்ந்து தென்காசி பகுதியில் அதிகாலையில் எந்த நகைகடையாவது உடைத்து திருடவேண்டும் என்று திட்டம் தீட்டியதாகவும், எனவே எதிரிகள் இதச பிரிவு 399 –ன் படியும் குற்றம் புரிந்துள்ளதாகவும் தென்காசி காவல்

நிலைய காவல் ஆய்வாளரால் குற்ற இறுதி அறிக்கையானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிரிகளுக்கு குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திலேயே வழக்கின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச பிரிவு 207ன் கீழ் வழங்கப்பட்டு, எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவு 399–ன் படியான குற்றம் அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்க குற்றமாக உள்ளதால் இந்த வழக்கு கு.வி.மு.ச. பிரிவு 209(அ) பிரிவின்படி அமர்வு நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

3. இரு தரப்பு வாதுரைகளையும் ஆவணங்களையும் பரிசீலனை செய்து எதிரிகள் குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் குற்றம் புரிந்திருக்கக்கூடும் என்று கருதுவதற்கு போதுமான ஆதாரங்கள் வழக்கில் இருந்தமையால் எதிரிகள் மீது இதச பிரிவு 399–ன் படி குற்றச்சாட்டு வனையப்பட்டு குற்றச்சாட்டு பற்றி எதிரிகளிடம் விளக்கிக்கூறி வினவியபோது எதிரிகள் குற்றச்சாட்டை மறுத்தனர். எதிரிகள் குற்றச்சாட்டை மறுத்த காரணத்தால் அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

4. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்களும் சாபொ–1 முதல் சாபொ–8 வரையான சான்றுபொருட்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>5) அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியத்தின் சுருக்கம்:–</u>

அசா–1 உதவி ஆய்வாளர் சேகனா சார்பு ஆய்வாளர் சிலுவை அந்தோணி, காவலர்கள் முத்துமாரி, அசா–2 முத்துராமன், அசா–3 வடிவேல் முருகன், சத்யராகவேந்திரன் ஆகியோர்கள் தென்காசி – ஆய்க்குடி ரோட்டிலுள்ள இரயில்வே கேட் அருகே ரோந்து வந்த போது இரயில்வே கேட்டிற்கு கிழக்கே 100 அடி துாரத்தில் ஒரு பாழடைந்த கட்டடத்திற்கு முன்பு மறைவாக 2

பைக்குகள் நின்றிருந்ததை பார்த்துள்ளார்கள். எதிரிகள் தென்காசியிலுள்ள ஏதாவது ஒரு நகைக்கடையை உடைத்து திருட வேண்டும் என்று பேசிக்கொண்டிருந்துள்ளார்கள். போலீஸ் பார்ட்டிகள் எதிரிகளை மடக்கி பிடித்து எதிரிகள் வைத்திருந்த 2 இருசக்கர வாகனங்களை சோதனை செய்து பார்த்த போது அதில் TN 76 M 8325 என்ற வாகனத்தின் டேங்க் கவரில் இரு மங்கி குல்லாக்கள், இரண்டு கை உறைகள், இரண்டு மிளகாய் பொடி பாக்கெட்டுகள், ஒரு அருவாள் இருந்துள்ளது. தரையில் சிறிய பாறைக்கம்பி, ஆணி பிடுங்கக்கூடிய மற்றொரு சிறிய கம்பியும் பைக்கிற்கு அருகே கீழே கிடந்துள்ளது. எதிரிகள் தென்காசியிலுள்ள ஒரு நகைக்கடையில் கள்ளக்களவு செய்ய வேண்டும் என்று சதித்திட்டம் தீட்டி கொண்டிருந்த விபரம் போலீசாருக்கு தெரிய வந்ததால் அசா–1 எதிரிகளை காவல் நிலையம் கொண்டு வந்து எதிரிகள் மீது தனி அறிக்கை அசாஆ–1 கொடுத்துள்ளார். அசா–5 காவல் ஆய்வாளர் லில்லிபாய் என்பவர் பணியில் இருந்த போது உதவி ஆய்வாளர் சேகனா என்பவர் கொடுத்த தனி அறிக்கை அசாஆ–1 பெற்று அதனடிப்படையில் முதல் தகவல் அறிக்கை அசாஆ–2 பதிவு செய்துள்ளார். பின்னர் இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவயிடம் சென்று சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் அசாஆ–3 மற்றும் மாதிரி வரைபடம் அசாஆ–4 தயார் செய்துள்ளார். பின்னர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். எதிரிகளை கைது ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரிகள் வைத்திருந்த இருசக்கர வாகனம், அருவாள், மங்கி குல்லா, மிளகாய்பொடி பாக்கெட், கையில் போடப்படும் இரப்பர் உறை, சிறிய இரும்பு பாறைக்கம்பி, ஆணி பிடுங்கும் கம்பி ஆகியவற்றை அத்தாட்சி அசாஆ–7 மற்றும் அசாஆ–8 மூலம் கைப்பற்றியுள்ளார். எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளாார். கைப்பற்றப்பட்ட சொத்துக்களை படிவம் 91 அசாஆ–9 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவு 399 இதசபின்படி குற்ற இறுதி அறிக்கை

தாக்கல் செய்துள்ளார். இத்துடன் அரசுத்தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

6. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிகளுக்கு பாதகமான அம்சங்கள் குறித்து எதிரிகளிடம் கு.வி.மு.ச 313(1)(ஆ) பிரிவின்படி வினவியபோது எதிரிகள் 'பொய் சாட்சி' என்று மறுத்துள்ளார்கள். எதிரிகள் தரப்பில், சாட்சிகள் 'இல்லை' என்று கூறியுள்ளார்கள்.

<u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்ன வென்றால்,</u>

7. அரசுத்தரப்பில், எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவு 399 – ன் படியான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதாகும்.

<u>8) தீர்வு–</u>

அரசுத்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையில் எதிரிகள் தென்காசி பகுதியில் அதிகாலையில் எந்த நகைகடையாவது உடைத்து திருடவேண்டும் என்று திட்டம் தீட்டியதாகவும், உள்ள இந்த வழக்கானது அரசுதரப்பு சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் எனவே எதிரிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்கவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

9. எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையில், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை எனவும், சம்பவத்தை கண்ணுற்றதாக தனிநபர் சாட்சியங்கள் எதுவும் இல்லை எனவும், அரசுத்தரப்பில் இந்த வழக்கு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை எனவும், புள்ளி விபர கணக்கிற்காக எதிரிகள் மீது பொய்யாக இந்த வழக்கு புனையப்பட்டுள்ளது எனவும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்க வேண்டுமென்றும் கூறியுள்ளார்.

10. இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டு வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அரசுத்தரப்பில், எதிரிகள் தென்காசி பகுதியில் அதிகாலையில் எந்த நகைகடையாவது உடைத்து திருடவேண்டும் என்று திட்டம் தீட்டியதாக

கூறப்பட்டு எதிரிகள் மீது இதச பிரிவு 399– ன்படி குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

11. அசா–1 காவல் உதவி ஆய்வாளர் சேகனா என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் சம்பவ நாள் சார்பு ஆய்வாளர் சிலுவை அந்தோணி, காவலர்கள் முத்துமாரி, முத்துராமன், வடிவேல் முருகன், சத்யராகவேந்திரன் ஆகியோர்களுடன் ரோந்து சென்ற போது தென்காசி – ஆய்க்குடி ரோட்டிலுள்ள இரயில்வே கேட் அருகே பாழடைந்த கட்டிடத்தில் சென்று பார்த்த போது எதிரிகள் தென்காசி உள்ள ஏதாவது ஒரு நகைக்கடையை உடைத்து திருட வேண்டும் என்று பேசிக் கொண்டிருந்தார்கள் எனவும், போலீசார் எதிரிகளை மடக்கி பிடித்து அவர்கள் வைத்திருந்த இரண்டு இருசக்கர வாகனங்கள், இரு மங்கி குல்லாக்கள், 2 கை உறைகள், இரண்டு மிளகாய் பொடி பாக்கெட்டுகள், ஒரு அருவாள், பாறைக் கம்பி, ஆணி பிடுங்கக்கூடிய மற்றொரு சிறிய கம்பி ஆகியவற்றை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றியதாகவும் பின்னர் காவல் நிலையம் வந்து அசாஆ–1 தனி அறிக்கை ஆய்வாளரிடம் கொடுத்ததாகவும் கூறியுள்ளார். அசா–2 முத்துராமன், அசா–3 வடிவேல் ஆகியோர்கள் சம்பவத்தை குறித்து சாட்சியம் அளித்துள்ளார்கள்.

12. சம்பவ நாள் சம்பவயிடத்திற்கு அசா–1, அசா–2, அசா–3 ஆகியோர்கள் ரோந்து சென்றதாக எந்த ஆவணங்களும் அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட இரு மங்கி குல்லாக்கள், 2 கை உறைகள், இரண்டு மிளகாய் பொடி பாக்கெட்டுகள், ஒரு அருவாள், பாறைக் கம்பி, ஆணி பிடுங்கக்கூடிய மற்றொரு சிறிய கம்பி ஆகியவற்றை எதிரிகள் எங்கிருந்து வாங்கினார்கள் என்பது குறித்து அரசுத்தரப்பில் எந்த சாட்சியங்களும் இல்லை. சம்பவத்தை கண்ணுற்றதாக அரசுத்தரப்பில் தனிநபர் சாட்சியங்கள் எதுவும் இல்லை. சம்பவத்தை குறித்து அசா–1, அசா–2, அசா–3 சாட்சியங்களில் முரண்பாடுகள் உள்ளது. இந்நிலையில் புள்ளி விவர கணக்கிற்காக எதிரிகள் மீது இந்த வழக்கு பொய்யாக

புனையப்பட்டுள்ளதா என இந்நீதிமன்றத்திற்கு சந்தேகம் எழுகிறது.

13. மேலே கூறிய விரிவான விளக்கங்களில் இருந்து, அரசுத்தரப்பில் இந்த வழக்கு சந்தேத்திற்கப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை எனவும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கலாம் என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

14. முடிவாக, எதிரிகள் மீதான இதச பிரிவு 399 –ன் படியான குற்றச்சாட்டு அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என்றும் முடிவு செய்து எதிரிகளை இதச பிரிவு 399–ன் படியான குற்றத்திலிருந்து குற்றவியல் விசாரணை முறைச் சட்டம் பிரிவு 235(i)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் எதிரிகள் விசாரணை காலத்தில் பிணையில் இருந்து வந்துள்ள நிலையில், மேல் முறையீட்டு காலத்திற்கு பின் எதிரிகளின் பிணை பத்திரம் ரத்து செய்திட உத்தரவிடப்படுகிறது.

15. இவ்வழக்கில் பிஆர் எண் 29/2026 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு, சாபொ–3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள அருவாள் ஒன்று. சாபொ–4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள வெள்ளை கருப்பு கலரில் உள்ள மங்கிகுல்லா ஒன்று, பிரவுன் கலரில் உள்ள மங்கிகுல்லா ஒன்று. சாபொ–5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள சக்தி மிளகாய் துாள் பாக்கெட் ஒன்று, ஆச்சி மிளகாய் துாள் பாக்கெட் ஒன்று. சாபொ–6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள வெளிரிய நிலையில் சந்தன கலரில் உள்ள இடது வலது கைகளில் போடக்கூடிய (இரப்பர்) உறைகள் இரண்டு ஜோடி. சாபொ–7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள சிறிய இரும்பு பாறைக்கம்பி ஒன்று. சாபொ–8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள சிறிய ஆணி பிடுங்கும் கம்பி ஒன்று ஆகியவை பயனற்ற பொருள்கள் என்பதினால் மேல்முறையீட்டு காலத்திற்குப் பின் அழிக்குமாறும், சாபொ–1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள TN 76 M 8325 என்ற பதிவு எண் கொண்ட ஹீரோ ஹோண்டா பேசன் புரோ பைக் ஒன்று தென்காசி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தின்

சிஆர்எம்பி எண் 8053/2017 12.12.2017 தேதியிட்ட உத்தரவுபடி வள்ளிபிரபாகரன் என்பவர் வசம் இடைக்காலப் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளதை அவரே தொடர்ந்து வைத்துக் கொள்ளவும், பிணைமுறி ரத்து செய்யப்பட வேண்டுமென்றும், மேல் முறையீடு இருப்பின் மேல் முறையீட்டு உத்தரவுப்படி செயல்பட வேண்டு மென்றும் உத்தரவிடப்படுகிறது. சாபொ–2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள TN 76 TN AC 2849 என்ற பதிவு எண் கொண்ட கருப்பு கலர் ஹீரோ ஹோண்டா பைக் ஒன்று கொடைக்கானால் காவல் நிலைய குற்ற எண் 369/2017, u/s. 379 IPC வழக்கு சம்மந்தப்பட்டது என்பதினால் கொடைக்கானால் காவல் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனவே அதனை பொறுத்து எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை திருத்தம் மேற்கொள்ளப்பட்டு 2026ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 11 ஆம் நாள் ஆகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.03.12 15:00:36 +0530

உதவி அமர்வு நீதிபதி மற்றும்
தலைமை நீதித்துறை நடுவர், தென்காசி.

<u>அரசு தரப்பு சாட்சிகள்</u> : –

| | | |
|---|---|---|
| அ.சா.1 | : | சேகனா (உதவி ஆய்வாளர்) |
| அ.சா.2 | : | திரு. முத்துராமன் (தலைமை காவலர்) |
| அ.சா.3 | : | திரு. வடிவேல்முருகன் (தலைமை காவலர்) |
| அ.சா.4 | : | திரு. முகமது இஸ்மாயில் |
| அ.சா.5 | : | திருமதி. லில்லிபாய் (காவல் ஆய்வாளர்) |

<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u> :–

<u>எண்.68ன் கீழான நீதிமன்ற படிவம்</u>

| வ. எ | ஆவணப்பட்டியல் மற்றும் தேதி | ஆவணப் பட்டியல் | எப்படி குறியீடு | யார் மூலம் | குறிப் புகள் |
|---|---|---|---|---|---|

| ண் | | | குறியீடு செய்த நாள் | செய்யப் பட்டது | குறியீடு செய்யப் பட்டது | |
|---|---|---|---|---|---|---|
| 1. | தனி அறிக்கை | 08.10.2017 | 15.12.2025 | அ.சா.ஆ.1 | அ.சா.1 | அசல் |
| 2. | முதல் தகவல் அறிக்கை | 08.10.2017 | 09.03.2026 | அ.சா.ஆ.2 | அ.சா.5 | அசல் |
| 3. | பார்வை மகஜர் | 08.10.2017 | 09.03.2026 | அ.சா.ஆ.3 | அ.சா.5 | அசல் |
| 4. | வரைபடம் | 08.10.2017 | 09.03.2026 | அ.சா.ஆ.4 | அ.சா.5 | அசல் |
| 5. | ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி | 08.10.2017 | 09.03.2026 | அ.சா.ஆ.5 | அ.சா.5 | அசல் |
| 6 | ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி | 08.10.2017 | 09.03.2026 | அ.சா.ஆ.6 | அ.சா.5 | அசல் |
| 7 | அத்தாட்சி | 08.10.2017 | 09.03.2026 | அ.சா.ஆ.7 | அ.சா.5 | அசல் |
| 8 | அத்தாட்சி | 08.10.2017 | 09.03.2026 | அ.சா.ஆ.7 | அ.சா.5 | அசல் |
| 9 | படிவம் 91 | 08.10.2017 | 09.03.2026 | அ.சா.ஆ.8 | அ.சா.5 | அசல் |

<u>அரசு தரப்பு சான்று பொருட்கள்:-</u>

| சான்று பொருள் எண் | ஆவணத்தின் / சாட்சிப் பொருளின் விளக்கம் | நிரூபித்தவர் / சான்றளித்தவர் |
|---|---|---|
| 1 | TN 76 M 8325 என்ற பதிவெண் கொண்ட ஹீரோ ஹோண்டா பேஷன் புரோ பைக் ஒன்று. | அசா-5 |
| 2 | TN 76 AC 2849 என்ற பதிவெண் கொண்ட ஹீரோ ஹோண்டா டீலக்ஸ் பைக் ஒன்று. | அசா-5 |
| 3 | அருவாள் ஒன்று | அசா-5 |
| 4 | மங்கி குல்லா (2 எண்ணம்) | அசா-5 |
| 5 | மிளகாய்ப்பொடி பாக்கெட் (2 எண்ணிக்கை) | அசா-5 |
| 6 | கையில் போடப்படும் இரப்பர் உறைகள் (2 ஜோடி) | அசா-5 |
| 7 | சிறிய இரும்பு பாறைக்கம்பி ஒன்று | அசா-5 |
| 8 | ஆணி பிடுங்கும் கம்பி ஒன்று | அசா-5 |

<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> :- இல்லை

<u>எதிரிகள் தரப்பு சான்று பொருள்கள்</u> :- இல்லை

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.03.12 15:00:42 +0530

உதவி அமர்வு நீதிபதி மற்றும்
தலைமை நீதித்துறை நடுவர், தென்காசி.

<u>பின் குறிப்பு:–</u>

- ✓ **எதிரிகள் விசாரணை காலத்தில் பிணையில் இருந்து வந்தனர்.**
- ✓ **சாட்சிகள் மூன்று நாட்களுக்கு மேல்விசாரிக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.**
- ✓ **காவல் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.**